2014 ஆகஸ்ட் 6]

355—

வீட்டுமனைப் பட்டா

***7856—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் வட்டம், காட்டூர் கிராமம், இந்திரா காலனியிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, பல்லடம் வட்டம், காட்டூர் கிராமம், புல எண் 49/2*B-ல் *அமைந்துள்ள இந்திரா காலனியில் 70 இந்து மாதாரி வகுப்பைச் சார்ந்த ஆதி திராவிட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். மேற்படி இடம் இந்து சமய அறநிலையத் துறையினைச் சார்ந்த அருள்மிகு கொடுவாய் நாகேஸ்வர சுவாமி கோயிலுக்குச் சொந்தமானது ஆகும். எனவே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்மூலம் அவ்விடத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடை கோடி ஏழையெளிய மக்களையும் கண் இமைபோல் காத்துவரும் எங்கள் உயிரோட்டமே! (மேசையைத் தட்டும் ஒலி) நாளொரு மேனியும் நலத் திட்டங்களை அறிவித்து உலகத் தலைவர்களை வியக்கவைக்க வாராது வந்த எங்கள் மாமணியே! பல்லடம் தொகுதிக்கு திருப்பூர் கூட்டுக் குடிநீர்த்*

திட்டம் தந்த எங்கள் குல விளக்கே! மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

பல்லடம் தாலுகா, காட்டூர் கிராமம் க.ச. எண் 49B/2 என்ற இடத்தில் 70 குடும்பங்கள் கடந்த 25 ஆண்டுகளாக வீடு கட்டி வசித்து வருகிறார்கள். இவர்களுக்குப் பட்டா வழங்க ஆவன செய்திடுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், பல்லடம் தாலுகா. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்வி போதும். மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுமனை இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைகள் வழங்கிட அரசு புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லாத நிலையில், அங்கு தனி நபர் எவரேனும் அரசின் வழிகாட்டி மதிப்பில் 1½ மடங்கு விலைக்கு மிகாமல் அரசுக்கு நிலங்களை வழங்கிட முன்வரும்பட்சத்தில் நிலங்கள் பெறப்பட்டு, பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்களைக் கையகப்படுத்தும்போது அவ்விடத்தின் அரசின் வழிகாட்டி மதிப்பு அல்லது சந்தை மதிப்பு இவற்றில் எது அதிகமோ, அதில் 1½ மடங்கு வரை இந்து சமய அறநிலையத் துறையால் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் பல்லடம் தொகுதி, காட்டூர் ஊராட்சி, காட்டூர் கிராமம் புல எண் 49/2B அமைந்துள்ள இடம் தொழிற்கூடம் நிறைந்த பகுதியாக இருப்பதால், இடத்தின் சந்தை மதிப்பு அரசின் வழிகாட்டி மதிப்பினைவிட பல மடங்கு அதிகம். எனவே, இவ்விடத்தில் வசிக்கும் ஆதி திராவிடக் குடும்பங்களுக்கு இத்துறையால் வீட்டுமனை வாங்கி வழங்கிட இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.